[1977 ஆகஸ்ட் 3]

திரு எஸ்.ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் துணைக் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, கிட்டப்பாவும், நானும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால், மற்ற மாவட்டங்கள் புறக்கணிக்கப்படும் என்று அர்த்தமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அவரை நெருக்கமாக இணைப்பதற்காக உறவு முறையைச் சொன்னேன். எல்லா மாவட்டங்களும் கவனிக்கப்படும்.

திரு க.அன்பழகன்: தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டத்தை மிக வேகமாக நிறைவேற்றுவதில், தீவிரமாக நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதைத் தீவிரப்படுத்த ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து ஆண்டுதோறும் எவ்வளவு கடன் பெறுகின்றோமோ, அதைப் பொறுத்துத்தான் திட்டங்களை நிறைவேற்ற முடிகிறது. எனவே, 1975—76, 1976—77 ஆண்டுகளில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் எவ்வளவு கடன் கொடுத்திருக்கிறது? வருகிற 1977—78 ஆம் ஆண்டில் எவ்வளவு நிதி கொடுக்க அவர்கள் இசைந்தார்கள், என்ன உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. அறிவிப்பு

மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு (Senate) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. கே.பி. கோபால், (2) திரு. இரா. இராமலிங்கம், (3) திரு. குப்பல் கே.எஸ். ராமகிருஷ்ணன், (4) திரு. எம்.எஸ்.கே. சத்தியேந்திரன் ஆகியோரின் பதவிக் காலம் 31—1—1976-ம் நாளுடன் முடிந்துவிட்டதால், பல்கலைக்கழகப் பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, மதுரைப் பல்கலைக்கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பதிவாரி அடிப்படையில் (Proportional representation) இத்தேர்வு நடைபெறுவதில்லை

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 9–8–1977, செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 9–8–1977 செவ்வாய்க்கிழமை, மாலை 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 10–8–1977 புதன்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 12–8–1977 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையிலிருக்கும் பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

நெல்லிக்குப்பம் காவல் துறையினரால் கைது செய்யப் பெற்ற திரு. சிதம்பரம் என்பவர் இறந்து விட்டதும், அதன் விளைவாக ஏற்பட்ட நிகழ்ச்சிகள் குறித்தும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம். "நெல்லிக்குப்பம் போலீசாரால் 30–7–1977 அன்று இரவு திரு. சிதம்பரம் என்பவர் கைது செய்யப்பட்டு, ஒரு மணி நேரத்தில் இறந்து விட்டதாலும், அதன் பின் நடந்த நிகழ்ச்சிகளாலும் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க "பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டு மென்று, திரு. சி. கோவிந்தராசன், திரு. வி. கே. கோதண்டராமன், திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு. ஆர். கிருஷ்ணன், திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, திரு. எம். செல்வராஜ், மற்றும் திரு ஜே. ஜேம்ஸ், திரு. துரை முருகன், திரு எம்.ஏ. லத்தீப் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் என்ற நபர் தேனாம்பேட்டையிலுள்ள ஒரு இன்கம்டாக்ஸ் ஆபீசரிடத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். சமையல் ஆள் என்று கூறப்படுகிறது, அவருக்கு உறவினர் கூட. அவர் நெல்லிக்குப்பம் சுந்தரபாண்டி என்ற கிராமத்திற்குச் சென்றிருக்கிறார். இந்த இன்கம்டாக்ஸ் ஆபீசர் அவருடைய